## TAMIL NADU POLLUTION CONTROL BOARD

**Minutes of the Public Hearing Meeting of M/s. R.V.M. Blue Metals, S.F.NO.51 (Part-4) of Allappanur Village, Thandrampattu Taluk, Tiruvannamalai District over an extent of 2.00.2 Hectares held on 10.07.2026 @ 11.00 am at M/s. Maniammal Govindasamy Kalyana Mandapam, Sathanur Dam Road, Thandrampattu Taluk, Tiruvannamalai District.**

**Participants:**

1. Thiru. T. D. Selvam
   Revenue Divisional Officer, Tiruvannamalai.
   (Representative of the District Collector, Tiruvannamalai)

2. Thiru. V. Jayakumar
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

3. Thiru. K. Prem Kumar
   Assistant Engineer,
   Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai

4. Thiru. V. Rajendran Tahsildar,
   Thandrampattu Taluk, Tiruvannamalai.

5. Thiru. K. Bharathi Revenue Inspector,
   Thandrampattu Sub-Taluk, Tiruvannamalai.

6. Thiru. K. Bharathi Revenue Inspector,
   Thandrampattu Sub-Taluk, Tiruvannamalai

7. Thiru. M. Sathiyaraj Village Assistant,
   Rayandapuram Village,
   Thandrampattu Taluk, Tiruvannamalai

8. Participants – As per List.

**District Environmental Engineer:**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the District Administration and the Tamil Nadu Pollution Control Board, welcomed the Revenue Divisional Officer, Tiruvannamalai, who had come to preside over the Public Hearing held in connection with obtaining Environmental Clearance for the rough stone quarry of M/s. R.V.M. Blue Metals, situated in S.F. No. 51 (Part-4), Allappanur Village, Thandrampattu Taluk, Tiruvannamalai District, and also the general public, environmental activists, press friends, the Project Consultant, and officials of the Police Department and other Government Departments.

Further, he stated: "As per the guidelines of the Environmental Impact Assessment Notification, 2006, in the case of granting Environmental Clearance for such projects, there is a rule in force whereby the opinions of the public belonging to that area are heard, and the Environmental Impact Assessment Authority grants the Environmental Clearance on the basis of those opinions. Accordingly, one month ago the management of this quarry obtained the Terms of Reference (ToR) order from the Environmental Impact Assessment Authority and submitted the application to the Tamil Nadu Pollution Control Board. In accordance with the guideline procedure relating to this, the details of this Public Hearing being conducted were already published as a notice in the Tamil and English newspapers dated 03.06.2026 and made available for public viewing. Likewise, it was placed for public viewing at the Tiruvannamalai office of the Tamil Nadu Pollution Control Board. Furthermore, by way of reminder, public announcements were made in the areas surrounding Allappanur Village through an auto fitted with a loudspeaker, through pamphlets, and through wall posters."

He further stated that the public may express their opinions and observations regarding this project, and that, while doing so, they should come forward one by one, state their name and the name of their village, and register their opinions. He also stated that all of this would be videographed and audio-recorded, and, with the approval of the District Collector, the proceedings and notes of this meeting would be sent to the State Environmental Impact Assessment Authority. He further stated that, on behalf of the owner of the proposed rough stone quarry, their Project Consultant would explain the presentation regarding the project to the public.

**Revenue Divisional Officer:**

Following this, the Revenue Divisional Officer, Tiruvannamalai, stated that, since Environmental Clearance for the rough stone quarry of M/s. R.V.M. Blue Metals would be granted on the basis of the opinions expressed, the public may express their opinions.

**Project Proponent, Environmental consultant, Geo Technical Mining Solutions, Dharmapuri:**

Following this, Dr. Vijaya Prabhu of M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri, the Environmental Impact Assessment Consultant for M/s. R.V.M. Blue Metals rough stone quarry, welcomed all those who had come to attend the Public Hearing and explained in detail, through an audio-visual presentation, the operation of the rough stone quarry project and the Environmental Management Plan that would be undertaken during its operation.

Following the above presentation, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, stated that the public may give their opinions. Before registering their opinions, he requested the public to

state their name and the name of their village and to record their opinions briefly and clearly.

**Accordingly, the following members of the public expressed their opinions and suggestions.**

**1. Thiru. Pandian, Vijayappanur Village:**

Thiru. Pandian stated that there is no impact of any kind to agriculture on account of this quarry coming up. He said that they are told that road facility and drinking water facility would come to their village because of this quarry, and that in a way this seems good for them. Reiterating that there is no impact of any kind to agriculture, he concluded his address.

**2. Thiru. Muthusamy, Allappanur Village:**

Thiru. Muthusamy stated that water is not being properly sprinkled on the roads, and that, on account of this, the village roads have been damaged, leaving goats and cattle unable to pass. He also said that it is difficult for goats and cattle to get drinking water. He further stated that, although they attempt to obtain water by sinking borewells to irrigate the crops around the village, adequate water is not available, and requested that this be looked into and addressed.

He said that dust control is very important, and that, whether in summer or in the rainy season, water is not sprinkled properly on the roads, so that a great deal of dust spreads and flies about. He further said that, because of the blasting, not only is there loud noise, but the blasting is done in such a way that houses shake, and that it should not be done like that. He said that if these matters can be set right, they should do so, and concluded his address.

**3. Thiru. Venkatraman, Allappanur Village:**

Thiru. Venkatraman said that there is a panchayat set-up under which work cannot be done merely on the resolution of the village panchayat president, but must be done only as they say. He stated that, when the people of this village have to go again to the District Collector, obtain an order, and then carry out work, their difficulty is very severe, and that no one takes notice of it, whereas it is said that the money comes only to the panchayat. He further stated that, because water is not sprinkled on the roads of Allappanur Village, it causes harm to the farmers who have crops nearby, and concluded his address.

**4. Thiru. Subbaramaiah, Tirupati:**

Thiru. Subbaramaiah stated that this Public Hearing is not a meeting for granting permission, and that its main purpose is to record and forward the opinions of the people. He said that support should be given to small quarries, and that this quarry coming up is good for this village, good for this town, and

good for this district. He stated that, before conducting the Public Hearing, a committee should be formed to study the quality of the water of the village where the quarry is situated, and to check whether CSR funds are being spent. He said that if the problems in the areas surrounding this quarry are identified and proper pollution-control rules are followed, the people will not raise objections. He therefore expressed his support for the R.V.M. Blue Metals rough stone quarry and concluded his address.

Thereafter, no one from among the public came forward to express any opinion.

The District Environmental Engineer said that the comments of the public hearing will be recorded in video and text form and sent to the State Environmental Impact Assessment Authority.

**District Environmental Engineer:**

Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, informed the gathering that if any member of the public wished to express further views, they may come forward and do so. He further stated that those who wished to submit their views in writing could submit their petitions before the officials present in the meeting hall.

After the members of the public had submitted their petitions, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, expressed his sincere gratitude, on behalf of the District Administration and the Tamil Nadu Pollution Control Board, to all the members of the public who participated in the event and expressed their views either orally or through petitions, as well as to the government officials, members of the press, police personnel, and all others who attended the proceedings.

He further informed that all the views and objections recorded during the public hearing, along with the audio and video recordings and the Tamil and English copies of the proceedings, would be submitted to the State Environment Impact Assessment Authority (SEIAA), Tamil Nadu, for consideration while granting Environmental Clearance. He stated that all the views and representations made by the public would be taken into consideration during the process of granting Environmental Clearance. Thereafter, he declared the Public Hearing meeting concluded.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**Revenue Divisional Officer,**
**Tiruvannamalai.**

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் அணை சாலையில் அமைந்துள்ள தி/ள். மணியம்மாள் கோவிந்தசாமி கல்யாண மண்டபத்தில் 10.07.2026 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், அல்லப்பனூர் கிராமம், புல எண். 51 (பகுதி–4) –ல் 2.00.2 ஹெக்டேர் பரப்பளவில் அமைவுள்ள தி/ள். R.V.M. புளூ மெட்டல்ஸ், சாதாரண கல் குவாரி திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை விவரங்கள்:**

**பங்கேற்றோர்:**

1. திரு. தி.த.செல்வம்
   வருவாய் கோட்டாட்சியர், திருவண்ணாமலை.
   (மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் பிரதிநிதி)

2. திரு. வெ. ஜெயக்குமார் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.

3. திரு. க. பிரேம் குமார் உதவி பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.

4. திரு. V. இராஜேந்திரன் வட்டாட்சியர்,
   தண்டராம்பட்டு வட்டம், திருவண்ணாமலை

5. திரு. K. பாரதி
   வருவாய் ஆய்வாளர்,
   தண்டராம்பட்டு உள்வட்டம், திருவண்ணாமலை

6. முனைவர். M. விஜய பிரபு திட்ட ஆலோசகர்,
   தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி

7. திரு. மு. சத்தியராஜ்
   கிராம உதவியாளர், இராயண்டபுரம் கிராமம்,
   தண்டராம்பட்டு வட்டம், திருவண்ணாமலை

8. பொதுமக்கள் – இணைப்பில் உள்ளப்படி

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள், திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், அல்லப்பனூர் கிராமத்தில் புல எண். 51 (பகுதி–4)–ல் அமையவுள்ள தி/ள். R.V.M. புளூ

மெட்டல்ஸ், சாதாரண கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்த வந்திருக்கும் வருவாய் கோட்டாட்சியர், திருவண்ணாமலை அவர்களையும், பொதுமக்கள், சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்கள், பத்திரிக்கை நண்பர்கள், திட்ட ஆலோசகர், காவல்துறை மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்களையும் மாவட்ட நிர்வாகம் சார்பாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாகவும் வரவேற்றார்.

மேலும் அவர் கூறுகையில், "இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டமானது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006ன் வழிகாட்டுதலின்படி இதுபோன்ற திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் பட்சத்தில் அந்த பகுதியை சார்ந்த பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிந்து, அந்த கருத்துக்களின் அடிப்படையில் சுற்றுச்சூழல் அனுமதியை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் வழங்கும் என்ற விதி அமலில் உள்ளது. அதன் அடிப்படையில் இந்த குவாரி நிர்வாகத்தினர் ஒரு மாத காலத்துக்கு முன்பு ToR என்ற செயல்பாட்டு ஆணையை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து பெற்று, விண்ணப்பத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் சமர்ப்பித்தனர். இது தொடர்பான வழிகாட்டு நெறிமுறையின்படி இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே 03.06.2026 தேதியிட்ட தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் அறிவிப்பாக வெளியிடப்பட்டு பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. அதேபோன்று, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் திருவண்ணாமலை அலுவலகத்திலும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. மேலும், நினைவூட்டும் விதமாக அல்லப்பனூர் கிராம சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி வசதியுடன் இயங்கிய ஆட்டோ மூலமாகவும், துண்டு பிரசுரங்கள் மூலமாகவும், சுவரொட்டிகள் மூலமாகவும் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள் மற்றும் பரிசீலனைகளை தெரிவிக்கலாம் எனவும், அவ்வாறு தெரிவிக்கும்போது பொதுமக்கள் ஒருவர் பின் ஒருவராக தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார். மேலும், இவையனைத்தும் ஒளி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார். மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் குவாரியின் உரிமையாளர் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் இத்திட்டம் தொடர்பான விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் தெரிவித்தார்.

**வருவாய் கோட்டாட்சியர்:**

அதனை தொடர்ந்து வருவாய் கோட்டாட்சியர், திருவண்ணாமலை அவர்கள், தி/ள். R.V.M. புளூ மெட்டல்ஸ், சாதாரண கல் குவாரி தொடர்பாக தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையில் சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்படுவதால், பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என தெரிவித்தார்.

**சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை ஆலோசகர், தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம்**

இதனை தொடர்ந்து தி/ள். R.V.M. புளூ மெட்டல்ஸ், சாதாரண கல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் முனைவர். M. விஜய பிரபு, தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள், பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று, சாதாரண கல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும், இதன் செயல்பாட்டின்போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரையை தொடர்ந்து, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை சுருக்கமாகவும் தெளிவாகவும் பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

**அதன்படி, கீழ்க்கண்ட பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.**

**1. திரு. பாண்டியன், விஜயப்பனூர் கிராமம்:**

திரு. பாண்டியன் அவர்கள், இந்த குவாரி வருவதனால் விவசாயத்திற்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை என்று தெரிவித்தார். இந்த குவாரியால் எங்கள் கிராமத்திற்கு சாலை வசதி, குடிநீர் வசதி வரும் என்று சொல்கிறார்கள்; அது ஒரு வகையில் எங்களுக்கு நல்லதாகத்தான் தெரிகிறது என்று கூறினார். மேலும், விவசாயத்திற்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை என்று கூறி தன் உரையை முடித்துக்கொண்டார்.

**2. திரு. முத்துசாமி, அல்லப்பனூர் கிராமம்:**

திரு. முத்துசாமி அவர்கள், சாலைகளில் சரியாக தண்ணீர் தெளிக்கப்படுவதில்லை என்றும், அதன் காரணமாக கிராமச் சாலைகள் சேதமடைந்து

ஆடு, மாடுகள் செல்ல இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், ஆடு மற்றும் மாடுகளுக்குக் குடிநீர் கிடைப்பதில் சிரமமாக உள்ளதாகவும் கூறினார். அத்துடன், கிராமத்தைச் சுற்றியுள்ள பயிருக்குத் தண்ணீர் விடுவதற்கு போர் போட்டு முயற்சித்தாலும் போதிய அளவு நீர் கிடைப்பதில்லை என்றும், இதைக் கொஞ்சம் கவனித்து சரி செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

தூசி கட்டுப்பாடு மிக முக்கியமானது என்றும், வெயில் காலமாகட்டும் அல்லது மழை காலமாகட்டும் சாலைகளில் தண்ணீர் முறையாகத் தெளிக்கப்படுவதில்லை; தூசி அதிகமாகப் பரவிப் பறக்கிறது என்றும் கூறினார். வெடி வெடிப்பதனால் அதிகமாகச் சத்தம் வருவது மட்டுமின்றி வீடு அதிரும் அளவுக்கு வெடி வைக்கிறார்கள்; அந்த மாதிரி வைக்கக்கூடாது என்றார். இவை அனைத்தையும் சரி செய்ய முடியும் என்றால் செய்யுங்கள் என்று கூறி தன் உரையை முடித்துக்கொண்டார்.

**3. திரு. வெங்கட்ராமன், அல்லப்பனூர் கிராமம்:**

திரு. வெங்கட்ராமன் அவர்கள், ஊர் பஞ்சாயத்துத் தலைவர் தீர்மானம் வைத்து வேலையைச் செய்ய முடியாது; அவர்கள் சொல்கிற மாதிரிதான் நாம் செய்ய வேண்டும் என்ற ஒரு பஞ்சாயத்து இருக்கிறது என்றார். இந்தக் கிராம மக்கள் மீண்டும் மாவட்ட ஆட்சியரிடம் சென்று உத்தரவு வாங்கிக் கொண்டு வேலை செய்யும்போது அவர்களது சிரமம் மிகப் பயங்கரமாக உள்ளது என்றும், யாரும் கண்டுகொள்ளவில்லை என்றும் தெரிவித்தார். ஆனால் பஞ்சாயத்திற்குத்தான் பணம் வருகிறது என்று சொல்கிறார்கள் என்றார். மேலும், அல்லப்பனூர் கிராம சாலைகளில் தண்ணீர் தெளிக்காத காரணத்தினால் அருகில் பயிர் வைத்துள்ள விவசாயிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று கூறி தன் உரையை முடித்துக்கொண்டார்.

**4. திரு. சுப்பராமையா, திருப்பதி:**

திரு. சுப்பராமையா அவர்கள், இந்த பொதுமக்கள் கருத்துக் கூட்டம் என்பது அனுமதி கொடுப்பதற்கான கூட்டம் இல்லை; மக்களுடைய கருத்துக்களைப் பதிவு செய்து அனுப்புவதே இதன் முக்கிய நோக்கம் என்று தெரிவித்தார். சிறிய குவாரிகளுக்கு ஆதரவு தர வேண்டும்; இந்த குவாரி வருவதனால் இந்தக் கிராமத்திற்கு நல்லது, இந்த ஊருக்கு நல்லது, இந்த மாவட்டத்திற்கு நல்லது என்றார். பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்துவதற்கு முன்பு ஒரு குழு அமைத்து, குவாரி அமைந்துள்ள கிராமத்தின் தண்ணீரின் தரம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும் என்றும், CSR பணம் செலவிடப்படுகிறதா என்று பார்க்க வேண்டும் என்றும் கூறினார். இந்த குவாரியைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து உரிய மாசு கட்டுப்பாடு விதிகளைப் பின்பற்றினால் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்க

மாட்டார்கள் என்றார். எனவே, R.V.M. புளூ மெட்டல்ஸ் கல் குவாரிக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறி தன் உரையை முடித்துக்கொண்டார்.

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை</u>**

பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள், பொதுமக்கள் வேறு யாரேனும் கருத்து கூறுவதாக இருந்தால் வந்து கூறலாம் என்றார். மேலும், நேரடியாக தங்கள் கருத்துக்களை மனுக்கள் வாயிலாக தெரிவிக்க வேண்டியவர்கள், மனுக்களை இவ்வரங்கில் அதிகாரிகள் முன்பு சமர்ப்பிக்கலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது என்றார்.

பொதுமக்கள் தங்களது மனுக்களை வழங்கிய பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், திருவண்ணாமலை அவர்கள், இந்நிகழ்வில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களையும், மனுக்கள் வாயிலாக தங்களது கருத்துக்களையும் தெரிவித்த பொதுமக்கள், இதர அரசு அலுவலர்கள், பத்திரிக்கை நண்பர்கள், காவல்துறை அன்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மாவட்ட நிர்வாகம் சார்பாகவும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பதிவு செய்யப்பட்ட அனைத்து கருத்துக்களும் ஒலி, ஒளி வாயிலாகவும், கூட்ட நடவடிக்கைகளின் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகள் அனைத்தும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு, சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் பொருட்டு சமர்ப்பிக்கப்படும். அங்கு தங்களது அத்தனை கருத்துக்களும் அனுமதி வழங்கும் பட்சத்தில் கருத்தில் கொள்ளப்படும் என்ற தகவலைத் தெரிவித்து, இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாகத் தெரிவித்தார்.

| | |
|---|---|
| **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை.** | **வருவாய் கோட்டாட்சியர்,<br>திருவண்ணாமலை.** 3/6 |